# மருத மடு மாதாவே

மருத மடு மாதாவே
மனுக்குலத்தின் தாயாரே
கருணையருள் செபமாலை
கனிந்திட நாம் செய்தாயே

**1**
மகிமை நிறை மாமரியே
மாதவருட் பூரணியே
மக்கள் பவம் பொறுத்தருள
மன்றாடாய் நின் சுதனை

**2**
பவம் செய்தோம் பாரினிலே
தவம் செய்தோம் உன் தயவால்
பட்சமுடன் பாரம்மா
பாவியெமைக் காரம்மா

**3**
ஐம்பத்து மூன்று மணி
அனுதினமும் ஓதிடுவோம்
மெய்பத்தி நான் பெருக
மேதியினியில் நீ அருள்வாய்

**4**
முப்பொழுதுங் கன்னிகையே
மூவுலகாள் ராக்கினியே
எப்பொழுதும் எம் மரணத்திலும்
எங்களை நீP காத்திடுவாய்